செ.வெ.எண் - 490 **மத்திய அரசின் சார்பில்** நாள் - 03 - 06.2016

# கைவினைக்கலைஞர்களுக்கு இலவச ஆயுள் காப்பீட்டுத்திட்டம்

மத்திய கைவினைப்பொருட்கள் : உதவி இயக்குனர் தகவல்:-

*****

இந்திய ஜவுளித் துறை அமைச்சகத்தின் கைவினைப்பொருட்கள் விற்பனை மற்றும் சேவை விரிவாக்க மையம், நாகர்கோவில் மற்றும் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC of India) இணைந்து கைவினைக் கலைஞர்களுக்கான ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தினை நடத்தி வருகிறது.

இந்த ஆண்டு 2016-17 இத்திட்டத்தில் சேவருவதற்கு கட்டணம் எதுவும் இல்லை.

இந்த ஆண்டு 70,000 கைவினைக் கலைஞர்களை இத்திட்டத்ததில் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் சேரும் கைவினைக் கலைஞர்களுக்கு இயற்கை மரணம் நேரிட்டால் ரூபாய் 60,000/- அறுபதாயிரம் மட்டும் ஆயுள் காப்பீட்டுத் தொகை அவரது வாரிசுக்கு வழங்கப்படும். விபத்தின் காரணமாக ஏற்படும் மரணத்திற்கு ரூ. ஒன்றரை லட்சம் (ரூபாய்.1,50,000/-) ஆயுள் காப்பீட்டுத் தொகை, அவரது வாரிசுக்கு வழங்கப்படும்.

9 முதல் 12ஆம் வகுப்பு படிக்கும் (அல்லது) 9 முதல் டிப்ளமோ இரண்டாம் ஆண்டு வரை படிக்கும் கைவினைக் கலைஞர்களின் மகன் / மகள், இரண்டு, மாணவர்களுக்கு, ஆண்டுக்கு ரூ.2400/- கல்வி ஊக்கத்தொகை, சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, கூடுதல் பலனாக கிடைக்கும்.

18 வயது முதல் 59 வயது வரம்புக்கு உட்பட்ட "கைவினைக் கலைஞர் அடையாள அட்டை" பெற்றுள்ள கைவினை கலைஞர்கள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். இதற்கான விண்ணப்பங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு : உதவி இயக்குனர் கைவினைப்பொருட்கள் விற்பனை மற்றும் சேவை விரிவாக்க மையம், கைவினைப் பொருட்கள் வளர்ச்சி ஆணையகம், 48/1, சிவராஜ் பில்டிங் 2ஆம் மாடி, மணிமேடை நாகர்கோவில்-629001 தொலைபேசி : 04562-232361 (அல்லது) மேலாளர் LIC of India P&GS அலுவலகம், 9A புனிதவதியார் தெரு பாளையங்கோட்டை, திருநெல்வேலி தொலைபேசி எண்: 046522577070 (அல்லது) LIC of India, P&GS அலுவலகம், ஜீவன் பிரகாஷ், ஸ்டேசன் ரோடு, செல்லூர், மதுரை-625002, தொலைபேசி எண்: 04652-2370361 ஆகிய அலுவலகங்களின் வாயிலாக நேரடியாக பெற்று பயன்பெறலாம்.

சென்ற ஆண்டு 2016-17, 30405 கைவினைக் கலைஞர்கள் தென் மாநிலங்களில் இத்திட்டத்தில் சேர்ந்து பயன் அடைந்துள்ளனர்.

4496 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் Rs.29.31 லட்சம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

35 கைவினைக் கலைஞர்களின் இயற்கை மரணத்தின் காரணமாக காப்பீட்டுத்தொகை ரூ.21000,00/- அவர்களது வாரிசுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மத்திய கைவினைப்பொருட்கள் வளர்ச்சி ஆணையத்தின் உதவி இயக்குனர் திரு. L. பாலு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்

L. BALU
Assistant Director (H)
Office of the Development Commissioner
(HANDICRAFTS), HM & SEC,
Ministry of Textiles, Govt. of India,
Shivaraj Building, Nagercoil - 629 001